செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 439 நாள் : 22/7/17

## பத்திரிக்கைச் செய்தி

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 100சமீ-க்கு குறையாத தனியார் பள்ளிகள், கல்லூரிகள், பிற கல்வி நிறுவனங்கள், திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், மருத்துவமனைகள், விடுதிகள், திரை அரங்குகள், நூலகங்கள், கிளப்புகள், மற்றும் இதர நிறுவனங்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள்(உரிமம்) சட்டம், 1965-ன் படி உரிமம் பெறப்பட வேண்டும். இதுவரை மேற்படி உரிமம் பெறாதவர்கள் உடனடியாக சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களை அணுகி பொதுக் கட்டிடங்கள் உரிமம் தொடர்பாக 1.அங்கீகரிக்கப் பெற்ற கட்டிடப் பொறியாளரால் வழங்கப்பட்ட **கட்டிட உறுதிச் சான்று(Structural Soundness Certificate)** 2.பொதுச் சுகாதாரத் துறையினரிடமிருந்து பெற்ற **சுகாதாரச் சான்று (Sanitary Certificate)** 3.உள்ளாட்சி அமைப்பு மற்றும் இதர அங்கீகாரம் பெற்ற துறைகளிடமிருந்து பெறப்பட்ட கட்டிட வரைபடம் **(Building Plan)** 4.உரிமக் கட்டணம் **(Prescribed Licence Fees)** 5.தீயணைப்புத் துறையினரிடமிருந்து பெற்ற தடையில்லாச் சான்று**(NOC)** ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறும், ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்படி உரிமத்தை தவறாமல் புதுப்பிக்குமாறும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் பொதுக் கட்டிட உரிமையாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

21/7/17

மாவட்ட ஆட்சித் தலைவர்
வேலூர்

22-7-2017
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.